**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 31.03.2023
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சாண எரிவாயு மேம்பாடு பயிற்சி

கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலுள்ள புதுப்பிக்கவல்ல ஆற்றல் பொறியியல் துறை, புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி அமைச்சகத்தின் நிதியுதவி பெற்று செயல்படும் சாண எரிவாயு மேம்பாடு மற்றும் பயிற்சி மையத்தின் (BDTC) மூலம் வேலையில்லா இளைஞர்களுக்கான சுழற்சாவி தொழிலாளர் பயிற்சி (16.03.2023 – 30.03.2023), உதவி பொறியாளர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அதிகாரிகளுக்கான பணியாளர் பயிற்சி (27.03.2023 – 30.03.2023) மற்றும் சாண எரிவாயு கட்டுமானத்திற்கான கொத்தனார் பயிற்சி (21.03.2023 – 29.03.2023) ஆகிய மூன்று பயிற்சிகள் திறம்பட நடத்தப்பட்டது.

பயிற்சியின் சிறப்பு அம்சமாக சாண எரிவாயு உற்பத்தி, அதன் பயன்பாடு, சுத்திகரிக்கப்பட்ட பயோமீத்தேன் தயாரிப்பு, சூரிய வெப்பம் மற்றும் ஒளிமின்னழுத்த தொழில்நுட்பங்கள் மற்றும் இதர புதிய புதுப்பிக்கவல்ல தொழில்நுட்பங்களை பற்றி எடுத்துரைக்கப்பட்டது. மேலும் சாண எரிவாயு கலனின் கட்டுமானம் மற்றும் பாரமரிப்பு குறித்த நடைமுறை பிரச்சனைகளைப் பற்றி அறிய பயிற்சியாளர்கள் களபயிற்சியிலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

பயிற்சியின் நிறைவாக, 30.03.2023 அன்று வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நிறைவு விழா நடைபெற்றது. புதுப்பிக்கவல்ல ஆற்றல் பொறியியல் துறையின் தலைவர் மற்றும் சாண எரிவாயு மேம்பாடு மற்றும் பயிற்சிமையத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் தே.ரமேஷ் வரவேற்புரை வழங்கினார். வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் அ. ரவிராஜ் சிறப்புரையாற்றி பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார். இறுதியாக, முனைவர் பொ. விஜயகுமாரி நன்றியுரை வழங்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**